செய்தி வெளியீடு எண் :11 நாள் : 09.09.2020

**தேனி மாவட்டம்**
**இமானுவேல் சேகரன் நினைவஞ்சலிக்கு பரமக்குடி செல்வது தொடர்பாக கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது :-**

******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இமானுவேல் சேகரன் நினைவு தினத்தையொட்டி நினைவஞ்சலிக்கு பரமக்குடி செல்வது தொடர்பாக கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள், சமுதாய தலைவர்கள் மற்றும் பிரதிநிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தற்போது நிலவி வரும் கொரோனா நோய் தொற்றை கட்டுப்படுத்துவதற்காகாக, ஊரடங்கு உத்தரவு காரணமாக பொதுமக்களின் நலன் கருதி பிற மாவட்டங்களிலிருந்து 11.09.2020 அன்று பரமக்குடியில் இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்த செல்வதற்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் குறித்து சமுதாய தலைவர்கள் மற்றும் பிரதிநிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.சாய் சரண் தேஜஸ்வி, இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், சமுதாய தலைவர்கள் மற்றும் பிரதிநிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**